# 22. மெய்ப்பற்று.



***கலிவிருத்தம்.***

***பண் - தக்கேசி.***

**சொ**ல்லு யர்ந்தமறை சொன்முடி வாமோர்
சொல்லி யம்புதுரை யாவரு முருகா
இல்லி டப்புரிவை விடநினை வேன்கோள்
வெல்லு முன்புரிவை விடநினை யேனே. 1

---

1. ***புரிவு*** = *அன்பு ; "அன்பாம் புரிவாண நேயமும்பேர்" என்பது* ***சூ - நிகண்டு.***

**ச**ரண நம்பினவர் சததமு முய்ய
அருளு மன்புடைய வயிலவ யாணர்
இரத மூர்புரிவை விடநினை வேனுள்
விரவு முன்புரிவை விடநினை யேனே. 2

**தே**வ தேவனெனுஞ் சிற்சபை முருகா
ஆவி போலுமுள வார்வலர் மகவோ
டேவ லார்புரிவை விடநினை வேனுள்
மேவு முன்புரிவை விடநினை யேனே. 3

**த**ஞ்ச மென்பவர்கள் சார்சர ணாவென்
நெஞ்சு ணின்றுணர்வை நீட்டொரு குகனே
வஞ்சி யின்புரிவை யேவிட வலிப்பேன்
விஞ்சு முன்புரிவை விடநினை யேனே. 4

**அ**மல வந்தணர்கள் பழிச்சிடு மயில்வேற்
குமர சம்பிரம குருபர கேட்டி
தமர்க டம்புரிவை யேவிட நினைவேன்
விமல வுன்புரிவை விடநினை யேனே. 5

**மா**சில் குங்கும பயோதர வள்ளி
பேசு மின்சொலமு துண்செவிப் பெரியோய்
நாசி யின்புரிவை நான்விட நினைவேன்
நேச நின்புரிவை விடநினை யேனே. 6

**அ**ரனொர் பங்குடைய வங்கயல் விழியாள்
முருக வென்கவிகொண் முழுமுத லடிகேள்
இரத நாப்புரிவை யேவிட நினைவேன்
விரத வுன்புரிவை விடநினை யேனே. 7

**சீ**த விந்துள வலங்கல்கொள் சேயோய்
ஓத ரும்பரிவ ருளத்தவி சுறைவோய்
ஏதில் கட்புரிவை யேவிட நினைவேன்
வேத வுன்புரிவை விடநினை யேனே. 8

*3.* **ஆர்வலர்** = *காதலித்தார்.*

**மா**லு மந்தணனும் வழிபடு முதல்வா
கால மெல்லைவினை கடந்த வதீதா
தூல மெய்ப்புரிவு துறந்திட நினைவேன்
வேல வுன்புரிவை விடநினை யேனே. 9

**து**ய்ய நின்றகவி னாற்புகழ் சொன்னோன்
ஐய கேட்டிசெவி யகக்கர ணங்கள்
உய்யொ ணாமனனி யுறங்கிட நினைவேன்
மெய்ய னுன்புரிவை விடநினை யேனே. 10

மன்மத வருடம் ஆவணி மாதம் 1ஆம் தேதி சுக்கிரவாரம்.